கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையைத் துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா? அது குறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஐந்து கிளை நிலையங்கள் வேறு இருக்கின்றன. மோட்டுப் பாளையம் கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ளது. கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் தற்பொழுது கணியம்பாடியில் கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. மோட்டுப்பாளையத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்படின் அது கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டாவதாக இருக்கும். இதையெல்லாம் கணக்கிட்டு, அந்த மோட்டுப்பாளையத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்றால் 13,246 தான், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி. எனவே, கணியம்பாடியில் நான்கு கால்நடை கிளை நிலையங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் அனுசரித்துத்தான் அங்கே ஏற்படுத்த வேண்டாமென்ற அவசியத்தை அரசு குறிப்பிடுகிறது.

வாச்சாம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டும் திட்டம்.

284—(*வினா எண் 21448)—திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூர் ஊராட்சி ஒன்றிய வாச்சாம்பட்டிக் கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்ட அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூர் ஊராட்சி ஒன்றிய வாச்சாம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 83,000 மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட மேலூர் ஊராட்சி ஒன்றியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்கு இதுவரை அளிக்கப்பட்ட அரசு மானியம் ரூ. 4,107. இன்னும் அளிக்கப்பட வேண்டிய அரசு மானியம் ரூ. 23,559.

(ஆ) இக்கால்நடை மருந்தகத்திற்கு மூலக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. சிகிச்சை மற்றும் அறுவைக்கூடம் கட்டப்பட்டு, மின் இணைப்பு, தண்ணீர் வசதி முதலியவை பெறப்பட்ட பின்னரே, ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து கால்நடைப் பராமரிப்புத்துறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.